DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.390/2022**

| | | |
|---|---|---|
| Name | : | வைரமுத்து **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of March 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை. மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் கேவிஎம் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் நடத்திவருவதற்கான கட்டிடத்தின் வாடகை ரசீதோ, இந்த நிறுவனம் நடத்துவதற்கான ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேவிஎம் டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தில் 2 லாரிகள் உள்ளது. இந்த 2 லாரிகளின் பதிவுச் சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிரான்ஸ்போர்ட்

நிறுவனத்தின் சங்கத்தில் நான் உறுப்பினராக இல்லை. என்னுடைய லாரிகள் லோடு ஏற்றிச் சென்றதற்கான டிரிட் ஷீட்டோ, டோல்கேட் ரசீதோ, லோடு ஏற்றிச் செல்வதற்கு பதிவு செய்த ரசீதுகளோ தாக்கல் செய்யவில்லை. லாரிகளுக்கு எரிபொருள் வாங்கியதற்கான ரசீதோ, டயர்கள் மற்றும் பராமரிப்பு செய்ததற்கான ரசீதுகளோ தாக்கல் செய்யவில்லை. 2 டிரைவர்களும், 2 கிளீனர்களும் என்னிடம் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு சம்பளம் வழங்கியதற்கான வரவு, செலவு கணக்கு விபரங்கள் என்னிடம் இல்லை. லாரிகளை நிதி நிறுவனத்தின் மூலமாக வாங்கியதன் அடிப்படையில் அதற்கான தவணை செலுத்தியதற்கான ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் வங்கிக்கணக்கு எதுவும் இல்லை. ரூ.1100/– சம்பளம் கொடுத்தேன் என்பதற்கு Voucher இல்லை. கையில் கொடுத்துவிடுவேன். அவர் வேலைக்கு வந்ததற்கான வருகைப்பதிவேடையும் பராமரிக்கவில்லை. கேவிளம் டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனமே கிடையாது என்றும், இறந்தவரின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக ம.சா.ஆ.5 உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றும், எனவே என்னுடைய சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்றாலும் சரியல்ல. லாரிகள் வைத்திருப்பதற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சாலை வரி கட்டியதற்காகவோ, அல்லது அனுமதிச்சான்றிதழ், தகுதிச்சான்றிதழ் பெற்றதற்கான ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.03.20 16:56:01 +0530